
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# இரட்சிப்பு ( பாவமன்னிப்பு ) பெற

## கீழ்படிய வேண்டிய நிபந்தனைகள்

---

| | | |
|---|---|---|
| 1. விசுவாசம் | : | யோவான் 8:24<br>எபிரேயர் 11:6 |
| 2. மனந்திரும்புதல் | : | லூக் 13:3<br>அப் 17:30 |
| 3. அறிக்கையிடுதல் | : | மத்தேயு 10:32<br>ரோமர் 10:9,10 |
| 4. ஞானஸ்நானம் | : | மத்தேயு 28:18-20 |

பி. ஆர்-எஸ். பெங்களூர்

மேலும் விபரங்களுக்கு, தபால் வழிவேத பாடங்கள் தேவைக்கும் உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

**Sathya Vazhi**

Post Box No. 8405,

Bangalore - 560084.

---

## HEART

Keep thy heart with all diligence; for out of it are the issues of life

Proverbs 4:23

| | | |
|---|---|---|
| HOPE | - | I PETER 3:15 |
| EXAMPLE | - | I TIMOTHY 4:12 |
| ARISE | - | EPHESIANS 5:14 |
| REJOICE | - | I THESSALONIAS 5:16 |
| TRUE | - | HEBREWS 10:22 |

ARJUNAN.

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 4 ஜூலை 1996 கனி 12


## அசுத்த ஆவி — UNCLEAN SPIRIT

அசுத்த ஆவிகளைப் பற்றி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லூக் 11:24-26ல் அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்படும் போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி அதில் வரும்போது, அது பெருக்கி ஜோடிக்கபபட்டியிருக்க கண்டு திரும்பிப் போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக் கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும். அப்பொது அந்த மனுஷனுடைய முன்னிலை-மையிலும் அவன் பின்னிலைமை அதிகக்கேடுள்ளதாயிருக்கும் என்றார். ஆம் பிரியமானவர்களே! அசுத்த ஆவிகள் வசதியாக இருக்கிற இடங்களையே தேடுகின்றன. ஒரு சிறிய பாவத்திற்கு அடிமைப்படும் போது ஒரு பிசாசே குடியிருக்கிறது. அதே வேளையில் விபச்சாரம், வேசித்தனம். அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம் பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள். கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், போன்றஅநேக பாவங்களுக்கு அடிமைப்படும் போது அது ஜோடிக்கப்பட்டதற்குச் சமம். ஆகையால் ஒரு பிசாசு மற்ற பிசாசுகளையும் அழைத்துக் கொண்டு வந்து தங்கி கூத்தடிக்கும், கும்மாளம் போடும அப்பொழுது ஆண்டவர் சொல்லுவது போல முன்னிலைமையைக் காட்டிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும்.

பிசாசு பிடித்த ஒருவன் இயேசுவைக்கண்ட போது கூக்குரலிட்டு, அவருக்கு முன்பாக விழுந்து இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே எனக்கும் உமக்கும் என்ன என்னை வேதனை படுத்தாதபடிக்கு உம்மை வேண்டி கொள்கிறேன் என்று மகாசத்தத்தோடே சொன்னான். இயேசு அவனை நோக்கி உன் பேர் என்னவென்று கேட்டார்.

அதற்கு அவன் லேகியோன் என்றான் அநேக பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப்பெயரைச் சொன்னான். தங்களை பாதாளத்தில் போக கட்டளையிடாத படிக்கு அவைகள் அவரை வேண்டிக்கொண்டன அவ் விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையில் மேய்ந்து கொண்டிருந்தது. அந்தப்பன்றிகளுக்குள் போகும்படி தங்களுக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டன அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார் அப்படியே பிசாசுகள் அந்த மனுஷனை விட்டு நீங்கி பன்றி களுக்குள் புகுந்தன......... பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான் இயேசு அவனை நோக்கி நீ உன் வீட்டுக்குத் திரும்பி போய், தேவன் உனக்கு செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார் லூக் 8:27.39. அசுத்த ஆவிகள் இயேசுவுக்கு முன்பாக விழுந்து பாதாளத்திலே அனுப்பி விடாதபடி வேண்டி கொள்கிறதையும் அவருக்கு பயப்படுகிறதையும் நாம் காண முடிகிறது. இப்படிப்பட்ட அசுத்த ஆவிகள் கொண்டு வருகிற காரியங்களை எதிர்த்து வேத வசனத்துடன் ஜீவிக்கும்போது நிச்சயமாக ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழமுடியும்.

தேவனுக்கு விரோதமான காரியங்களில் இருக்கும் போதும், வேத வசனத்தைத் தெரிந்தும் மாற்றி போதிக்கும் போதும், கீழ்படிய மறுக்கும் போதும் ஒரு மனிதனுக்குள் அசுத்த ஆவி வந்து குடிகொள்ள ஆரம்பிக்கும் இவ்வித-மாகவே பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவனாகிய யூதா-சுக்குள் சாத்தான் புகுந்தான் என்று லூக் 22:3ல் வாசிக் கின்றோம். சாத்தான் ஒருவனுக்குள் உட்புகுந்தால் என்ன நடக்கும்? தேவனுக்கு எதிராக ஜீவிக்க ஆலோசனை கொடுத்து இறுதியில் அந்த மனிதனை மரணத்துக்கு நேராக வழிநடத்துவான். அப்படியே யூதாஸ் நான்று கொண்டு செத்தான். சவுலை தெரிந்து கொண்ட கர்த்தர் அவனை இராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் ஏன் தெரியுமா? அவன் கர்த்தருடைய வார்த்தையை புறக் கணித்தபடியினால் கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார். அவரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி

அவனை கலக்கப்பண்ணிக் கொண்டிருந்தது 1 சாமு 16:14 வேத வசனத்திற்கு விரோதமாக செயல்படும் போது ஆவியானவர் நம்மை விட்டு கடந்து போகிறார். அதுமாத்திரமல்ல I கொரி 3:17 ன் படி ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். மேலும் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும் படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் என்று II தெச 2:12 ல் பார்க்கிறோம்.

இன்றைய நாட்களில் அசுத்தஆவி பிடித்த அநேகரை நாம் காணமுடிகிறது. காரணம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதால் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்களுக்கு இந்த அசுத்த ஆவி பிடிப்பதில்லை. பிசாசுகளைதுரத்துகிறோம் என்று கூறிக்கொள்ளுகிறவர்கள் அதை துரத்தமாட்டாமல் தவித்துக் கொண்டிருக்கிறவர்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறது இப்பிசாசுகள். அப் 19 ம் அதிகாரத்தில் இயேசுவைப் பற்றிக் கொள்ளாத சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லத்துணிந்து பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்...... பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள்யார் என்றுசொல்லி, பொல்லாத ஆவியுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிர்வாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள். பிரிய நண்பரே! பிசாசை விரட்டுவது சாதாரணக் காரியமல்ல. அவனுக்கு இடம்கொடாது ஆவிக்குரிய பட்டயத்தை எடுத்துக் கொண்டு எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொது யாக் 4:7 படி பிசாசு உங்களை விட்டு ஓடிப் போவான்.

பிரிய நண்பரே! ரோம 8:11ன் படி இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

காத்தோ நாம் உண்மை அந்த ஆவியின் பிடியிலிருந்து காப்பாராக.

★ சபை செய்திகள்:

1. ஜுன் 8ம் தேதி வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை பாஸ்டர்களை விசேஷித்த ஆசீர்வாதங்களைக் கட்டும் கடைப்பிடித்து. இதில் அநேகர் வந்து கொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

2. ஜுன் 15ம் தேதி விராலிப்பட்டியைச் சேர்ந்த ஞாயிறு பள்ளி மாணவி கர்த்தருக்குள் மரித்துவிட்டாள் இக்குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

3. கடந்த ஜுன் மாதம் 21,22,1996 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் திண்டுக்கல் மாவட்டம் அரசண்டு மற்றும் குன்னூர் சபையார் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் சத்தியவழி வானொலி பிரசங்கியார் சகோ. P.R. சாமி அவர்கள் வேதவசனங்களை பகுத்துப் போதித்தார்கள். அது சமயம் மூன்று பேர்கள் கல்வேலியிற்கு திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். இவர்களுக்காக ஜெபியுங்கள்.

★ ஜுன் மாத இதழின் விடைகள்:

1. யோவான் 5:35
2. வல்லமையுள்ளவர் சங் 93:4
3. மோசேக்கும் ஆரோனுக்கும் வெள்ளிக்காக எண் 16:3
4. கோபாக்கினைக்கென்று இரட்சிப்படைவதற்கென்று 1தெச 5:9
5. காணவுமில்லை, அறியவுமில்லை 1 யோ 3:6
6. யெரோபெயாம்
7. ஐம்பதினாயிரம்
8. அளவிடப்படாதவைகள், ஆராயப்படாதவைகள்
9. கர்த்தருக்கென்று, கர்த்தருக்கென்று
10. இமெனேயும், அலெக்சந்தரும்

★ ஜுன் மாத இதழில் வெற்றி பெற்றவர்கள்

1. சகோதரி மேரிஎலிசபெத் கலைவாணி, வத்தலக்குண்டு
2. சகோதரி மேரியம்மாள்.
3. சகோ. ஜெபர்சன் ஐரேனிபுரம்

1995 ஆகஸ்டு முதல் 1996 ஜூலை வரை வேத அறிவுப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் அதிகமாக வெற்றி பெற்றது யார்? அவருக்கு பரிசு என்ன? அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

ஆசிரியர்.

## நீ ஆயத்தப்படு......உன் குடும்பத்தை ஆயத்தப்படுத்து

## Prepare Thyself And Thy Family

அன்பான சகோதரிகளே! தேவனை சந்திக்க நீங்கள் ஆயத்தமா? ஆயத்தமானால் உங்கள் குடும்பத்தார் கர்த்தராகிய இயேசுவை சந்திக்க ஆயத்தத்துடன் இருக்கிறார்களா? ஒரு குணசாலியான ஸ்திரி. தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள் என்று (நீதி 31:27) வேதம் சொல்லுகிறது. அந்நாட்களில் ராகாப் என்ற ஒரு ஸ்திரிதன்னையும், தன் குடும்பத்தையும் இரட்சித்துக் கொண்டாள் இவள் ஒரு வேசியாக இருந்த போதிலும், கர்த்தர் ஒருவரே தேவன் என்று அறிந்து அறிக்கையிட்டவளாய், தேவனுடைய வல்லமைகளையும், மகத்துவங்களையும் கேள்விப்பட்டு அவருக்குப் பயந்து தன்னையும், தன் குடும்பத்தையும் சாவுக்குத் தப்புவித்துக் கொண்டாள். இது தன் குடும்பத்தார் மேல் கொண்ட இவளது கரிசனை அல்லவா?.

எரிகோ என்ற பட்டணத்தை வேவுபார்க்கும்படி யோசுவா சித்தீமிலிருந்து இரண்டு மனுஷரை அனுப்பினார் யோசு 2:1. அவர்களை எரிகோ இராஜாவின் கண்களுக்கு மறைத்து, விசுவாசத்தினாலே வேவுக்காரரை சமாதானத்தோடே ஏற்றுக்கொண்ட இந்த ராகாப் கர்த்தர் இஸ்ரவேலருக்கு செய்தபலத்த காரியங்களை குறித்து கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப் போயிற்று உங்கள்தேவனுகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர், இப்போதும், நான் உங்களுக்குத் தயவுசெய்தபடியினால் நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்கு தயவுசெய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டு, நீங்கள் என்தகப்பனையும் என் தாயையும்

என் சகோதரரையும் என் சகோதரிகளையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச்சாவுக்கு தப்புவிக்கும்படி எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்றாள் யோசு 2:11-13. அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி: இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும் போது, நீ இந்தச் சிவப்பு நூல் கயிற்றை எங்களை இறக்கி விட்ட ஜன்னலிலே கட்டி, உன்தகப்பனையும் உன் தாயையும் உன் சகோதர்களையும் உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக் கொள் என்றார்கள் யோசு 2: 17. அந்தபடியே அவள் அந்த சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டி வைத்து தன்னோடு கூட தன் குடும்பம் முழுவதையும் அழிவுக்குத் தப்புவித்துக் கொண்டாள்.

அன்பான சகோதரிகளே; ஒருவரும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல. கர்த்தரை ருசித்துப் பார்த்த நாமும் கூட நம் குடும்பத்தை கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் கொண்டு வருவோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கிநம்மை சுத்தகரிக்கும் 1 யோவா 1:7. அது நம்மை சாவுக்கு நீக்கி நமக்கும் நம் குடும்பத்துக்கும் நித்திய ஜீவனை அளிக்கும். அன்று வீட்டு நிலைக் கால்களில் தெளிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேலரை சங்காரத் தூதனிடமிருந்து காப்பாற்றியது ஜன்னலிலே கட்டப்பட்ட சிவப்பு நூல் கயிறு ராகாபையும், அவள் குடும்பத்தையும் காத்தது. இன்று இயேசுவின்ரத்தம் நம்மையும், நம் கும்பத்தையும் காப்பாற்ற வல்மையுடையதாய் இருக்கிறது.

அன்பு சகோதரிகளே! நாமும்கூட தேவனாகிய கர்த்தரே உயரே வானத்திலும், கீழே பூமியிலும் தேவனுனவர் என்று பறைசாற்றி, அவரது சித்தத்திற்குக் கீழ்படிந்து சீக்கிரமாய் வரப்போகிற நமதாண்டவராகிய இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுவோம், நம் குடும்பத்தையும் ஆயத்தப் படுத்துவோம். வல்லமையுடையவர் தாமே நம்மை ஆயத்தப் படுத்தி அழிவுக்குவிலக்கி இரட்சிப்பாராக!

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. தன் பொக்கி ஷசாலைகளில் உள்ளதெல்லாவற்றையும் பாபிலோனியருக்கு காண்பித்த இராஜா யார்?

2. இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு எந்தப் பதார்த்தமும் எப்படியிருக்கும்?

3. தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்கு யாராயிருக்கக்கடவன்?.

4. முப்பது குமாரர்களையும் முப்பது குமாரத்திகளையும் புறத்திலே விவாகம் பண்ணிக் கொடுத்தவன் யார்?

5, அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான், என்ன இல்லை ?

6 ஸ்திரியானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து எப்படிக்கற்றுக் கொள்ளக்கடவள் ?

7. சுவிஷேசத்தை முதலாவது கேட்டவர்கள் எதனாலே அதில் பிரவேசியாமற்போனார்கள்?

8. தீமை செய்து பாடநுபவிப்பதிலும் தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே எப்படியிருக்கும்

9. நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, அநியாயஞ் செய்தால் அவன் அதினால் என்ன ஆவான்?

10. நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன் என்று யார் சொல்வது?.

இம் மாதம் இறுதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் முதல் ஐந்திற்க்கு வசன ஆதாரத்துடனும் கடைசி ஐந்திற்க்கு விடைமட்டும் வேதத்திலிருந்து எழுதி அனுப்புங்கள்.

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.
Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti RoadBTL